[1991 செப்டம்பர் 19

59—

மானாமதுரையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பணிமனை.

*1451 - திரு. வ. மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பணிமனை ஒன்று தொடங்கி சுற்றுப்புறக் கிராமங்களுக்கு நகரப் பேருந்து விட அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானாமதுரையில் இருந்து சுற்றுப்புற கிராமங்களுக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, மானாமதுரையில் பணிமனை தேவை இல்லை எனக் கருதப்படுகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் மானாமதுரைப் பகுதியைப் புறக்கணித்த செய்தியை நேரிலே தெரிவித்திருக்கின்றேன். சிவகங்கையில் உள்ள பணிமனை மானாமதுரை கிராமங்களிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரம் அப்பால் இருக்கின்ற காரணத்தால் மானா மதுரை பகுதியில் உள்ள கிராமங்களுக்குப் பேருந்து விட முடியாத நிலை இருக்கிறது. நமது புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலேயாவது இந்தப் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை, சிவகங்கை யிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவிலும், பரமக்குடியிலிருந்து 29 கிலோமீட்டர் தொலைவிலும் இருக்கின்ற காரணத்தால், இரண்டு பணிமனைகளிலிருந்தும் பேருந்துகளை இயக்குகின்ற காரணத்தால் 30 கிலோமீட்டர் தூரம் இருக்கின்ற மானாமதுரை யில் அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அங்கே பணிமனை துவங்கத் தேவையில்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு நான்கு அல்லது ஐந்து தடங்களுக்குத் தான் செல்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் இன்னும் மீதமுள்ள 200 அல்லது 300 கிராமங்களுக்கு அதைக் கவர் செய்கின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 19]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு 90க்கு மேற்பட்ட சதவிகித மக்கள் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக புரட்சித் தலைவி அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் உறுதியாக சில கருத்துக்களைப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரையாக வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவுரைகளை ஏற்று, 'உண்மையைச் சொல் உறுதியுடன் சொல், இறுதிவரை சொல்' என்ற தத்துவத்தை நிறைவேற்றுகின்ற வகையில், போக்குவரத்துக் கழகங்கள் ஓராண்டிற்குள் உங்கள் குறைகள் அனைத்தையும் களையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு வனம் மற்றும் மீனவளத்துறை அமைச்சர்.

60—

புதுப்பேட்டையில் கால்நடை மருத்துவமனை

*1504. திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு வனம் மற்றும் மீனவளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரம் புதுப்பேட்டை பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய நிலையில் இதற்கு திட்டம் இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆத்தூர் தொகுதி புதுப்பேட்டையைச் சேர்ந்த கல்லாநத்தம், துளுக்கனூர் மற்றும் முல்லைவாடி, சந்தனகிரி, முட்டல் போன்ற ஊர்களில் 20,000-க்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ளதாலும், 7-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளதாலும், இப்பகுதியில் 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதாலும் வருகின்ற நிதி ஆண்டிலேயாவது இங்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கப்படுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே உள்ள மருந்தகங்கள் ஆத்தூர், மல்லிகரை, மஞ்சினி, கால்நடை கிளை நிலையங்கள் மொத்தம் இருப்பது 4.